மார்ச் 2020

விண்மீன்.காம்

# இரண்டாவது வார நடப்பு நிகழ்வுகள்

08 மார்ச் – 14 மார்ச்

www.winmeen.com

## நடப்பு நிகழ்வுகள்

**1.அண்மையில் வெளியான, "Chronicles of Change Champions" என்னும் நூல், எந்தத் திட்டத்தின்கீழ் எடுக்கப்பட்ட முன்னெடுப்புகளின் தொகுப்பாகும்?**

அ. தூய்மை இந்தியா இயக்கம்

ஆ. போஷன் மா அபியான்

**இ. பெண் குழந்தைகளை பாதுகாப்போம், கற்பிப்போம் ☑**

ஈ. சுகம்ய பாரத்




❖ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி ஜூபின் இரானி, "Chronicles of Change Champions" என்ற நூலை வெளியிட்டார். இந்நூல், "பெண் குழந்தைகளை பாதுகாப்போம், கற்பிப்போம்" திட்டத்தின்கீழ் மாநிலம் & மாவட்ட அளவில் எடுக்கப்பட்ட 25 புதுமையான முயற்சிகளின் தொகுப்பாகும். இந்தத் திட்டத்தை, பிரதமர் நரேந்திர மோடி, கடந்த 2015ஆம் ஆண்டில் ஹரியானாவின் பானிபட்டிலிருந்து தொடங்கிவைத்தார். இது பெண்கள் & குழந்தைகள் மேம்பாடு, மனிதவள மேம்பாடு மற்றும் சுகாதார மற்றும் குடும்பநலன் ஆகிய மத்திய அமைச்சகங்களின் முத்தரப்பு முயற்சியாகும்.

**2. 'SCORES' என்பது இந்தியாவின் எந்த ஒழுங்காற்று அமைப்பின் அலைபேசி செயலியாகும்?**

அ. மனை விற்பனை ஒழுங்குமுறை ஆணையம்

ஆ. இந்திய ரிசர்வ் வங்கி

**இ. இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம் ☑**

ஈ. தேசிய வீட்டுவசதி வங்கி




❖ SEBI புகார்களுக்கு தீர்வுகாணும் அமைப்பு (SCORES) வலைதளத்தில், முதலீட்டாளர்கள் தங்களது குறைகளை உள்ளிட உதவுவதற்காக, SEBI (இந்திய பங்கு மற்றும் பரிவர்த்தனை வாரியம்) சமீபத்தில் ஓர் அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது. ஏற்கனவே செயலிலுள்ள, 'SCORES' வலைதளத்தின் அனைத்து அம்சங்களையும் இச்செயலி கொண்டுள்ளது. iOS மற்றும் ஆண்ட்ராய்டு இயங்குதளங்களில் கிடைக்கக்கூடிய, 'SEBI SCORES' என்ற இச்செயலி, SEBI'க்கு கடிதங்களை அனுப்புவதற்குப் பதிலாக SCORES'இல் புகாரளிக்க முதலீட்டாளர்களை ஊக்குவிக்கும்.

**3.உலகின் 100 ஆற்றல்வாய்ந்த பெண்களின் அண்மைய பட்டியலில், எந்த இந்தியப்பெண்மணியை, '1947ஆம் ஆண்டின் பெண்' என TIME இதழ் குறிப்பிட்டுள்ளது?**

**அ. அம்ரித் கௌர் ☑**

ஆ. சரோஜினி நாயுடு

இ. இந்திரா காந்தி

ஈ. சாவித்ரிபாய் புலே



❖ TIME இதழ், அண்மையில் தனது சிறப்பிதழில், கடந்த நூற்றாண்டை வரையறுத்த, "உலகின் நூற்று ஆற்றல்வாய்ந்த பெண்களின்" பட்டியலை வெளியிட்டது. அதில், விடுதலைப்போராளி அம்ரித் கௌரை

'1947ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண்' என்றும், முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியை, '1976ஆம் ஆண்டுக்கான சிறந்த பெண்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

❖ அமைச்சரவையில்சேர்ந்த முதல் பெண்மணியான அம்ரித் கௌர், 10 ஆண்டுகள் சுகாதார அமைச்சராக பணியாற்றினார். இந்திய குழந்தைகள் நலத்துறையை நிறுவிய அவர், பெண் கல்வி, வாக்களிக்கும் உரிமை, மணமுறிவு மற்றும் குழந்தை திருமணத்திற்கு எதிராக பாடுபட்டார்.

**4.பணியாளர் வருங்கால வைப்பு நிதி அமைப்பு (EPFO) அறிவித்தபடி, நடப்பு நிதியாண்டில் (2019–20) வைப்புத்தொகைக்கான வட்டி விகிதம் என்ன?**

அ. 8.9%

**ஆ. 8.5% ☑**

இ. 8.2%

ஈ. 8.6%

8.5%

❖ நடப்பு நிதியாண்டுக்கான (2019–20) பணியாளர் வருங்கால வைப்பு நிதி (EPF) மீதான வட்டி 8.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. 2018–19ஆம் நிதியாண்டுக்கான வட்டி 8.65 சதவீதமாக இருந்துவந்த நிலையில், தற்போது 2019–20ஆம் நிதியாண்டுக்கான வட்டி 8.5 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இது கடந்த ஏழு ஆண்டுகளில் இல்லாத அளவிலான குறைந்த வட்டி விகிதமாகும். மத்திய அறங்காவலர் வாரியக்குழுவானது EPF மீதான வட்டியை நிர்ணயிக்கிறது.

**5.மகாராஷ்டிராவின் எந்த வானூர்தி நிலையத்திற்கு, 'சத்ரபதி சம்பாஜி மகாராஜ் வானூர்தி நிலையம்' எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது?**

**அ. ஔரங்காபாத் வானூர்தி நிலையம் ☑**

ஆ. கோலாப்பூர் வானூர்தி நிலையம்

இ. புனே சர்வதேச வானூர்தி நிலையம்

ஈ. அகோலா வானூர்தி நிலையம்



❖ மகாராஷ்டிரா மாநில அரசு அண்மையில் அம்மாநிலத்தின் ஔரங்காபாத் வானூர்தி நிலையத்திற்கு, 'சத்ரபதி சம்பாஜி மகாராஜ் வானூர்தி நிலையம்' எனப் பெயர் மாற்றியது. சிறந்த மராட்டிய போர்வீரரான சத்ரபதி சிவாஜியின் மகன் சம்பாஜியின் பெயரால் இந்த வானூர்தி நிலையம் மறுபெயரிடப்பட்டுள்ளது. இவ்வானூர்தி நிலையம், இந்திய வானூர்தி நிலையங்கள் ஆணையத்திற்கு சொந்தமானதாகும்.

**6.கட்டுப்பாடற்ற ஆளில்லா விமானங்களை எதிர்கொள்வதற்காக, செயற்கை நுண்ணறிவு அடிப்படையில் இயங்கும் ஆளில்லா விமானத்தை உருவாக்கியுள்ள இந்திய நிறுவனம் எது?**

அ. இந்திய அறிவியல் நிறுவனம்

ஆ. அறிவியல் & தொழிற்துறை ஆராய்ச்சிக் கழகம்

**இ. இந்திய தொழில்நுட்ப நிறுவனம், மெட்ராஸ் ☑**



ஈ. DRDO ஆய்வகம்

❖ எதிரி நாட்டு ஆளில்லா உளவு விமானங்களை செயலிழக்கச் செய்யும் செயற்கை நுண்ணறிவுத் (AI) தொழினுட்பத்தில் இயங்கும் ஆளில்லா விமானத்தை மெட்ராஸ் IIT ஆராய்ச்சிக்குழு வடிவமைத்துள்ளது. இந்த ஆளில்லா விமானம், 'Rogue Drones' என அழைக்கப்படுகிறது.

❖ இவ்விமானம், எதிரி நாட்டு உளவு ஆளில்லா விமானத்தைப் பின்தொடர்ந்துசென்று அதன் GPS நிரலில் மாறுதல்களை உருவாக்கி, அதன் பாதையை மாற்றும் அல்லது பாதுகாப்பாக தரையிறங்கச்செய்யும் திறனுடையதாகும். அதுமட்டுமின்றி காவற்துறை கண்காணிப்பு, பிற பாதுகாப்பு செயல்பாடுகளுக்கும் இந்தச் செயற்கை நுண்ணறிவு ஆளில்லா விமானத்தைப் பயன்படுத்த முடியும்.

**7.நெருக்கடிக்குள்ளான இந்தியாவின் ஐந்தாவது பெரிய தனியார் துறை வங்கி எது?**

அ. இண்டஸ்இண்ட் வங்கி

**ஆ. YES வங்கி ☑**

இ. IDFC முதல் வங்கி

ஈ. பந்தன் வங்கி

❖ ரிசர்வ் வங்கியின் கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள YES வங்கியின் மறுசீரமைப்புத் திட்டத்தை இந்திய ரிசர்வ் வங்கி அண்மையில் வெளியிட்டது. பாரத ஸ்டேட் வங்கி (SBI) YES வங்கியில் முதலீடு செய்து இந்த மறுசீரமைப்புத் திட்டத்தில் பங்கேற்கவுள்ளது என்றும் ரிசர்வ் வங்கி அறிவித்தது.

❖ தேவையான மூலதனத்தை திரட்ட முடியாததால் YES வங்கியின் நிதிநிலை படிப்படியாக சரிவைக் கண்டது. இந்நிலையில், YES வங்கியிலிருந்து வாடிக்கையாளர்கள் அதிகபட்சமாக ₹50,000 மட்டுமே எடுக்கமுடியும் என ரிசர்வ் வங்கி அறிவித்தது. YES வங்கியின் நிர்வாகத்தையும் தன்வசம் எடுத்துக் கொண்டுள்ள ரிசர்வ் வங்கி, பாரத ஸ்டேட் வங்கி (SBI) முன்னாள் தலைமைச் செயல் அதிகாரி பிரசாந்த் குமாரை அதன் நிர்வாகியாக அறிவித்துள்ளது.

**8.வர்த்தகம் & வளர்ச்சிக்கான ஐ.நா மாநாடு (UNCTAD) வெளியிட்டுள்ள அண்மைய மதிப்பீடுகளின்படி, COVID-19 வைரஸ் பாதிப்பால் அதிகம் பாதிக்கப்பட்ட பொருளாதாரம் எது?**

அ. அமெரிக்கா

ஆ. சீனாவின் தைவான் மாகாணம்

**இ. ஐரோப்பிய ஒன்றியம் ☑**

ஈ. ஜப்பான்



❖ ஐ.நா'இன் வர்த்தகம் மற்றும் வளர்ச்சி தொடர்பான மாநாட்டில் (UNCTAD) சீனாவில் பரவிய COVID-19 வைரஸ் பாதிப்பால் உலகின் முன்னணி 15 பொருளாதார நாடுகளில் ஏற்படும் பாதிப்பு பற்றிய மதிப்பீடு வெளியிடப்பட்டது. COVID-19 வைரஸ் பாதிப்பால் சீனாவில் ஏற்பட்டுள்ள உற்பத்தி மந்த நிலையால், உலக அளவில் சுமார் $50 பில்லியன் டாலர் அளவுக்கு ஏற்றுமதி வர்த்தகம் பாதிக்கப்படும் என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

❖ இதன்படி, இந்தியாவில் சுமார் $348 மில்லியன் டாலர் அளவுக்கு வர்த்தகத்தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. அதிகபட்சமாக ஐரோப்பிய யூனியன் ($15.6 பில்லியன்), அமெரிக்கா ($5.8 பில்லியன்), ஜப்பான் ($5.2 பில்லியன்), தென்கொரியா (3.8 பில்லியன்), தைவான் ($2.6 பில்லியன்) போன்ற நாடுகளின் வர்த்தகத்தில் பாதிப்பு ஏற்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**9.எந்தப் பன்னாட்டு அமைப்பின் புதிய தலைமை இயக்குநராக சிங்கப்பூரைச் சார்ந்த டேரன் டாங் (Daren Tang) பரிந்துரைக்கப்பட்டுள்ளார்?**

**அ. உலக அறிவுசார் சொத்து நிறுவனம் ☑**

ஆ. உலக சுங்க அமைப்பு

இ. பன்னாட்டு தொழிலாளர் அமைப்பு

ஈ. உலக நலவாழ்வு அமைப்பு



❖ உலக அறிவுசார் சொத்து நிறுவனத்தின் (World Intellectual Property Organization) ஒருங்கிணைப்புக் குழுவானது அண்மையில் சிங்கப்பூரைச் சார்ந்த டேரன் டாங்கை தலைமை இயக்குநர் பதவிக்கு பரிந்துரைத்தது. WIPO'இன் பொது அவை, ஒருங்கிணைப்புக் குழுவின் நியமனத்தை உறுதிப்படுத்தும்.

❖ டாங், தற்போது சிங்கப்பூரின் அறிவுசார் சொத்து அலுவலகத்தின் தலைமை நிர்வாகியாக பணியாற்றி வருகிறார். தற்போதைய தலைமை இயக்குநராக பணியாற்றிவரும் பிரான்சிஸ் குர்ரி அவர்களின் பதவிக்காலம் எதிர்வரும் செப்டம்பர் மாதத்தில் முடிவடைகிறது.

**10.சுதிர் பார்கவாவையடுத்து இந்தியாவின் புதிய தலைமை தகவலாணையராக நியமிக்கப்பட்டுள்ளவர் யார்?**

அ. பிமல் ஜலன்

**ஆ. பிமல் ஜூல்கா ☑**

இ. கஸ்தூரி ரங்கன்

ஈ. கோபால சுவாமி



❖ மத்திய தகவலாணையத்தின் புதிய தலைமை தகவலாணையராக பிமல் ஜூல்கா (Bimal Julka) நியமிக்கப்பட்டுள்ளார். மத்திய தகவலாணையத்தின் தலைமை ஆணையராக இருந்த சுதிர் பார்கவா கடந்த ஜன.11 அன்று ஓய்வுபெற்றார். தலைமை தகவலாணையராக நியமிக்கப்பட்ட பிமல் ஜூல்காவுக்கு குடியரசுத்தலைவர் மாளிகையில் நடந்த பதவியேற்பு விழாவில், குடியரசுத்தலைவர் ராம்நாத்கோவிந்த் பதவிப்பிரமாணம் செய்துவைத்தார்.

❖ புதிய தலைமை தகவலாணையராக பிமல் ஜூல்கா பொறுப்பேற்றதைத் தொடர்ந்து, மத்திய தகவல் ஆணையத்தில் ஆணையருக்கென அனுமதிக்கப்பட்ட மொத்த 11 இடங்களுள் தற்போது 5 ஆணையர் பணியிடங்கள் மட்டும் காலியாகவுள்ளன.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- சர்வதேச பெண்கள் நாளையொட்டி, மத்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சகத்தின் சென்னை பத்திரிகை தகவல் அலுவலகம் சார்பில், "மகளிருக்கு அதிகாரமளித்தல் – சவால்களும், வாய்ப்புகளும்" என்பது பற்றிய கருத்தரங்கமும், கலந்துரையாடலும் ஸ்ரீபெரும்புதூரில் உள்ள இளைஞர் மேம்பாட்டுக்கான இராஜீவ் காந்தி தேசிய நிறுவனத்தில் நடைபெற்றது.

- தேனியில் அரசு சட்டக்கல்லூரி கட்டடத்துக்காக, முதலமைச்சர் பழனிசாமி, தலைமைச்செயலகத்தில் நடந்த நிகழ்ச்சியில் காணொலிக்காட்சிமூலமாக அடிக்கல் நாட்டினார்.

- நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யத்தை அடுத்த ஆறுகாட்டுத்துறையில் ₹150 கோடியில் மீன்பிடித் துறைமுகம் அமைக்க, அரசாங்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் பழனிசாமி தெரிவித்துள்ளார்.

## நடப்பு நிகழ்வுகள்

**1. 'சப்சார் குட்' என்பது எந்த இந்திய மாநிலத்தின் / யூனியன் பிரதேசத்தின் பிரபலமான திருவிழாவாகும்?**

அ. மத்திய பிரதேசம்

ஆ. அஸ்ஸாம்

**இ. மிசோரம் ☑**

ஈ. அருணாச்சல பிரதேசம்




- 'சப்சார் குட்' என்பது மிசோரம் மாநிலம் முழுவதும் கொண்டாடப்படும் ஒரு பிரபலமான திருவிழாவாகும். வசந்த காலத்தை வரவேற்கும் நோக்கில் இவ்விழா கொண்டாடப்படுகிறது. இந்த விழாவை அதனுடன் தொடர்புடைய பல கலாசார நிகழ்வுகளுடன் மாநில மக்கள் அனைவரும் கொண்டாடுகின்றனர். சேராவ் (பாரம்பரிய மூங்கில் நடனம்) உள்ளிட்ட நடன மற்றும் இசைநிகழ்வுகளில் மக்கள் அனைவரும் திரளாகப் பங்கேற்கின்றனர்.

**2.அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் (IASST) அண்மைய ஆய்வின்படி, 'Endophytic Actinobacteria'ஐ பயன்படுத்துவதன்மூலம் எந்தத் தாவரத்தில் வேதி உரத்தின் பயன்பாடுகளை குறைக்க முடியும்?**



அ. கரும்பு

**ஆ. தேயிலை ☑**

இ. பருத்தி

ஈ. காப்பி

- கௌகாத்தியில் உள்ள அறிவியல் மற்றும் தொழில்நுட்பத்தில் மேம்பட்ட ஆய்வுகளை மேற்கொள்ளும் நிறுவனத்தின் (IASST) ஆராய்ச்சியாளர்கள், 'எண்டோபைடிக் ஆக்டினோபாக்டீரியா'வில் பூஞ்சைக் காளான் வளர்ச்சியை எதிர்க்கும் செயற்கூறுகள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். 'எண்டோபைடிக் ஆக்டினோபாக்டீரியா'வைப் பயன்படுத்துவதன்மூலம், தேயிலைத்தோட்டப்பயிரில், வேதியுரங்களின் பயன்பாடுகளைக் குறைக்கமுடியும் என்பதையும் அவர்கள் கண்டறிந்துள்ளனர்.
- IASST என்பது அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின்கீழ் இயங்கிவரும் ஒரு தன்னாட்சிமிக்க நிறுவனமாகும். இக்கண்டுபிடிப்பு, பூச்சிக்கொல்லி பயன்பாட்டைக் குறைக்கவும், இயற்கை முறையில் விளைவிக்கப்பட்ட தேயிலையின் ஏற்றுமதியை பல நாடுகளுக்கு அதிகரிக்கவும் உதவும்.

**3.அண்மையில் எந்தத் தொழில்நுட்ப நிறுவனத்தின் இந்தியப்பிரிவின் தகவல் தொடர்பு இயக்குநராக பிபாஷா சக்கரவர்த்தி நியமிக்கப்பட்டார்?**

அ. அமேசான்

**ஆ. பேஸ்புக் ☑**

இ. கூகிள்

ஈ. மைக்ரோசாப்ட்



❖ CISCO'இன் முன்னாள் நிர்வாகி பிபாஷா சக்கரவர்த்தி, சமீபத்தில், பேஸ்புக் இந்தியாவின் புதிய தகவல் தொடர்புத்தலைவராக நியமிக்கப்பட்டார். பேஸ்புக் இந்தியாவில் தகவல் தொடர்பு இயக்குநராக தனது புதிய பாத்திரத்தின்கீழ், இந்தியாவில் பெருநிறுவன தகவல் தொடர்பு மற்றும் மக்கள் தொடர்புகளை பிபாஷா சக்கரவர்த்தி வழிநடத்துவார். பேஸ்புக் மற்றும் இன்ஸ்டாகிராம் ஆகிய இரண்டின் இந்தியப் பிரிவு தகவல் தொடர்புத்துறையையும் அவரே கையாளுவார்.

## 4. 'முழு மரபணு தொடர்வரிசையாக்கம்' ஆராய்ச்சியுடன் தொடர்புடைய துறை எது?



அ. வேளாண்மை

**ஆ. மரபியல் ☑**

இ. சுற்றுச்சூழல்

ஈ. ஆற்றல்

❖ 'GenomeIndia: Cataloguing the Genetic Variation in Indians' என்ற மரபணு ஆராய்ச்சித் திட்டத்தை, 3 ஆண்டு காலத்திற்கு மேற்கொள்வதற்கு, 20 நிறுவனங்களுக்கு, உயிரித்தொழில்நுட்பத்துறை அனுமதி தந்துள்ளது. இந்தத்திட்டத்தின்கீழ், நாட்டின் பலதரப்பட்ட மக்கள் சமூகத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 10,000 நபர்களை பகுப்பாய்வு செய்யும், 'Whole Genome Sequencing' மேற்கொள்ளப்படவுள்ளது. இதன் விளைவாக வரும் தகவல்களைக்கொண்டு, எதிர்காலத்தில் மானுட மரபியல் குறித்த ஆராய்ச்சியை செயல்படுத்த முடியும் மற்றும் நோய்களுக்கான துல்லியமான நோயறிதல்களை உருவாக்க முடியும்.

## 5. அயல்நாட்டு பங்களிப்புகளைப் பெறுவதற்கான ஓர் அமைப்பின் உரிமைகுறித்த, உச்சநீதிமன்றத்தின் அண்மைய தீர்ப்பின் பின்னணியில், FCRA என்பது எதைக் குறிக்கிறது?



அ. அயல்நாட்டு நாணய (ஒழுங்குமுறை) சட்டம்

**ஆ. அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டம் ☑**

இ. அயல்நாட்டு நாணய (உரிமைகள்) சட்டம்

ஈ. அயல்நாட்டு பங்களிப்பு (உரிமைகள்) சட்டம்

❖ பொதுநலனுக்காக, 'கடையடைப்பு' மற்றும் 'வேலைநிறுத்தம்' போன்ற நியாயமான எதிர்ப்பின் வழிமுறைகளைக்கொண்டு போராடும் பொதுமக்களை ஆதரிக்கும் ஓர் அமைப்பு, அயல்நாட்டு நிதியைப் பெறுவதற்கான நியாயமான உரிமையை இழக்க முடியாது என இந்திய உச்சநீதிமன்றம் சமீபத்தில் தீர்ப்பளித்தது. ஆனால், அரசியல் கட்சிகளால், அயல்நாட்டு நிதியைப் பெறுவதற்கு பயன்படுத்தப்படும் நிறுவனங்கள் அனைத்தும், அயல்நாட்டு பங்களிப்பு (ஒழுங்குமுறை) சட்டத்தின்கீழ் மிகக்கடுமையான நடவடிக்கைகளுக்கு ஆளாகும் என்றும் உச்சநீதிமன்றம் தனது தீர்ப்பில் தெரிவித்துள்ளது.

❖ அயல்நாட்டு நிதிப்பங்களிப்பை ஏற்றுக்கொள்வதையும் பயன்படுத்துவதையும் கட்டுப்படுத்துவதற்காக, கடந்த 2010ஆம் ஆண்டில் இந்தச்சட்டம் இயற்றப்பட்டது.

**6.அண்மையில் மறுசீரமைக்கப்பட்ட, தேசிய பேரிடர் அபாயக் குறைப்புக்கான அமைப்பின் தலைவர் யார்?**

**அ. மத்திய உள்துறை அமைச்சர் ☑**

ஆ. மத்திய பாதுகாப்பு அமைச்சர்

இ. மத்திய சுற்றுச்சூழல் அமைச்சர்

ஈ. மத்திய நிதியமைச்சர்



❖ தேசிய பேரிடர் அபாயக் குறைப்புக்கான அமைப்பின் (National Platform for Disaster Risk Reduction தலைவராக மத்திய உள்துறை அமைச்சர் அமித்சா நியமிக்கப்பட்டுள்ளார். உள்துறை அமைச்சகத்தின் கட்டுப்பாட்டில் உள்ள இந்த அமைப்பை நடுவணரசு, முழுமையாக மாற்றியமைத்துள்ளது.

❖ NPDRR'இன் துணைத்தலைவர்களாக உள்துறை அமைச்சகத்தில் உள்ள பேரிடர் மேலாண்மைக்குப் பொறுப்பான இணையமைச்சர் மற்றும் தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தின் துணைத் தலைவர்கள் ஆகியோர் உள்ளனர்.மத்திய பாதுகாப்பு அமைச்சர் இராஜ்நாத் சிங், மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மத்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கர் உள்ளிட்டோர், இந்த அமைப்பின் பிற உறுப்பினர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

**7.மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது எந்தப் பன்னாட்டு அமைப்போடு இணைந்து, "பணியின் எதிர்காலம்: இந்தியாவின் தொழிலாளர்படையில் பெண்கள்" என்ற விவாதத்தை ஏற்பாடு செய்தது?**

**அ. உலக வங்கி ☑**

ஆ. ஐ.நா. பெண்கள்

இ. ஐக்கிய நாடுகள் அவை

ஈ. பன்னாட்டுத் தொழிலாளர் அமைப்பு

WORLD BANK GROUP

❖ மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகமானது உலக வங்கியுடன் இணைந்து புது தில்லியில், "The Future of Work: Women in India's Workforce" என்ற தலைப்பில் ஒரு விவாதத்தை ஏற்பாடு செய்தது. உலக வங்கியின் இந்திய இயக்குநர் Dr. ஜுனைத் கமல் அகமதுவுடன் இணைந்து மத்திய பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் ஸ்மிருதி ஜூபின் இரானி இந்நிகழ்வைத் தொடங்கிவைத்தார். நடப்பாண்டு (2020) சர்வதேச பெண்கள் நாள் கொண்டாட்ட நிகழ்வுகளின் ஒரு பகுதியாக, வணிகம், அரசாங்கம், தனியார் மற்றும் சமூக அமைப்புகளில் பெண்களின் சாதனைகளை கௌரவிக்கும் வகையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

**8.சர்வதேச பெண்கள் நாளைக் கொண்டாடுவதற்காக இந்திய இரயில்வே துறை நடத்திய பரப்புரையின் கருப்பொருள் என்ன?**

அ. Travel safely

**ஆ. Each for Equal ☑**

இ. We are with you

ஈ. He and She



❖ சர்வதேச பெண்கள் நாளைக் (மார்ச் 8) கொண்டாடுவதற்காக இந்திய இரயில்வே மார்ச் 1–10 வரை பத்து நாள் நீண்ட பரப்புரையை நடத்திவருகிறது. பாலின சமத்துவத்தைக் குறிக்கும், 'Each for Equal' என்பது இப்பரப்புரையின் கருப்பொருளாகும். பெண் சாதனையாளர்களின் எழுச்சியூட்டும் கதைகளை எடுத்துக்கூறும், #SheInspiresU என்றவொன்றிலும் இந்திய இரயில்வே கவனம் செலுத்தியது. இந்தப் பரப்புரையின்கீழ், பெண் பயணிகளுக்கு பிரத்தியேக வசதிகளை வழங்கவும், இந்திய இரயில்வேயில் பணிபுரியும் பெண் ஊழியர்களுக்கு அதிகாரம் வழங்கவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

**9. 'மாணாக்கர் நலவாழ்வு அட்டை' என்ற பள்ளி நலவாழ்வு கல்வித்திட்டத்தை அண்மையில் அறிமுகம் செய்த மாநிலம் / யூனியன் பிரதேசம் எது?**

அ. புது தில்லி

**ஆ. ஜம்மு & காஷ்மீர் ☑**

இ. மத்திய பிரதேசம்

ஈ. இராஜஸ்தான்

❖ ஜம்மு–காஷ்மீரில், அரசுப்பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் உடல்நலம் மற்றும் நலவாழ்வுக்காக, 'மாணாக்கர் நலவாழ்வு அட்டை' என்றவொரு திட்டத்தை அந்த யூனியன் பிரதேசத்தின் துணை நிலை ஆளுநர் கிரிஷ் சந்திர முர்மு அண்மையில் அறிமுகப்படுத்தினார்.

❖ இந்தப்புதிய திட்டத்தின்மூலம், ஆண்டுதோறும் மாணாக்கரை மருத்துவப்பரிசோதனைக்கு உட்படுத்தி, அவர்களின் தடுப்பூசி விவரங்கள் அந்த அட்டையில் பதியப்படும். மாணாக்கரின் உடல்நலன் கண்கா–ணிக்கப்படுவதால், நோய்கள் பரவாமல் தடுக்கலாம்.

**10.அகர்தலா மற்றும் கோஜடங்கா ஆகிய இரண்டும், அண்மையில், அங்கீகரிக்கப்பட்ட தரைவழி குடிவரவு சோதனைச்சாவடிகளாக அறிவிக்கப்பட்டன. கோஜடங்கா அமைந்துள்ள மாநிலம் எது?**

அ. நாகாலாந்து

**ஆ. மேற்கு வங்கம் ☑**

இ. அஸ்ஸாம்

ஈ. மேகாலயா



❖ இந்தியா–வங்கதேச எல்லையில் அமைந்துள்ள திரிபுராவின் தலைநகரமான அகர்தலா மற்றும் மேற்கு வங்கத்தின் கோஜடங்கா ஆகிய இரண்டும், செல்லுபடியாகும் பயண ஆவணங்களுடன் இந்திய நாட்டுக்குள் நுழைய அல்லது வெளியேறுவதற்கென அங்கீகரிக்கப்பட்ட தரைவழி குடிவரவு சோதனை–ச்சாவடிகளாக அண்மையில் அரசாங்கத்தால் அறிவிக்கப்பட்டன.

❖ உள்துறை அமைச்சகத்தின் சமீபத்திய அறிவிப்பின்படி, குடிவரவு பணியகத்தின்கீழ், அகர்த்தலா மற்றும் கோஜடங்காவிற்கு மூத்த குடிவரவு அதிகாரிகள் நியமிக்கப்பட்டுள்ளனர். கடவுச்சீட்டு (இந்தியாவுக்குள் நுழைதல்) விதிகள், 1950இன்கீழ் இந்தப்பதவி உருவாக்கப்பட்டுள்ளது.

# தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாட்டின் திட்டக்குழு துணைத்தலைவராக முன்னாள் அமைச்சர் C.பொன்னையன் நியமனம் செய்யப்பட்டுள்ளார். இதற்கான உத்தரவை திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை கூடுதல் தலைமைச்செயலாளர் ஜெயஸ்ரீ ரகுநந்தன் வெளியிட்டார். தமிழ்நாட்டின் மாநில திட்டக்குழுவானது முதலமைச்சர் தலைமையில் செயல்பட்டு வருகிறது.

- சர்வதேச பெண்கள் நாளை முன்னிட்டு கோவை – ஈரோடு இடையே இயங்கும் விரைவு இரயிலை, பெண் ஊழியர்கள் இயக்கினர்.

- நாட்டிலேயே முதன்முறையாக இந்திய உணவுக்கழகம் சார்பில் தஞ்சாவூரில் ₹1.23 கோடி செலவில் 'உணவு அருங்காட்சியகம்' அமைகிறது.

- பெரம்பலூர் மாவட்டம், எறையூர் சக்கரை ஆலையில் இணை மின்னுற்பத்தி நிலையம் மற்றும் ஆலை நவீனமயமாக்கப்பட்ட பணிகளை சென்னையில் உள்ள தலைமைச்செயலகத்திலிருந்து காணொலிக் காட்சிமூலம் தமிழ்நாட்டின் முதலமைச்சர் பழனிசாமி திறந்துவைத்தார்.

- சென்னை மாநகராட்சியும், 'ஸ்டார்ட் இந்தியா' அறக்கட்டளையும் இணைந்து சென்னையில் பொது மக்களிடையே கலையுணர்வை வளர்க்கும் வகையில், 'கண்ணகி கலை மாவட்டம்' என்ற திட்டத்தை தொடங்கியுள்ளன. தமிழ்நாட்டில் இந்தத்திட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ள முதல் நகரம் சென்னை. இது இந்தியாவிலேயே ஐந்தாவது நகரமாகும். கலையை பொதுமக்களிடம் கொண்டுசேர்ப்பதும், அதனை சமூக முன்னேற்றத்திற்கான ஊடகமாக பயன்படுத்துவதுமே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

- நடப்பாண்டுக்கான, 'ஔவையார் விருது' திருவண்ணாமலை மாவட்டத்தைச் சார்ந்த ரா.கண்ணகி என்பவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவருக்கு, ₹1 இலட்சத்துக்கான காசோலை, 8 கிராம் தங்கப்பதக்கம், சான்றிதழ் ஆகியவற்றை தமிழ்நாட்டின் முதலமைச்சர் பழனிசாமி வழங்கினார்.

- கோயம்புத்தூரைச் சார்ந்த கல்வியியல் பட்டதாரி மணிகண்டன் (27), புதுச்சேரியில் பிறந்து அரியலூர் உட்கோட்டை அரசாங்கப் பள்ளியில் இரவுக்காவலராகப் பணியாற்றி ஓய்வுபெற்ற இரா.அரிதாசு (71), திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த கல்லூரி மாணவர் த.ஆரோக்கிய ஆலிவர் இராசா ஆகிய மூவரும் தமிழ்நாடு அரசின் அகரமுதலித்திட்ட இயக்ககம் சார்பில், "தூய தமிழ்ப்பற்றாளர்" விருதுக்கு மாநில அளவில் தேர்வுசெய்யப்பட்டுள்ளனர். இவர்கள் மூவரும் யாரிடமும் தயக்கமில்லாமல் தூய தமிழையே பயன்படுத்தும் ஆர்வத்தினராவர்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1. 'I am also digital' என்ற தலைப்பில், அண்மையில், டிஜிட்டல் கல்வியறிவு குறித்த ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்திய மாநில அரசு எது?**



அ. ஒடிசா

**ஆ. கேரளா ☑**

இ. ஜார்க்கண்ட்

ஈ. பீகார்

❖ கேரள மாநிலம், 'I am also digital' என்ற பேரளவிலான டிஜிட்டல் கல்வியறிவு குறித்த பரப்புரையைத் தொடங்கவுள்ளது. அது, மாநிலத்தின் திட்டங்களால் விளையும் பல்வேறு நன்மைகளை பொதுமக்கள் அறிந்துகொள்வதை நோக்கமாகக்கொண்டுள்ளது.

❖ இந்தப் பரப்புரையை, தகவல் தொழில்நுட்பத் துறையின்கீழ் இயங்கிவரும் கேரள எழுத்தறிவு திட்டம் மற்றும் கேரள மாநில தகவல் தொழினுட்பத்திட்டம் ஆகியவை இணைந்து தொடங்கியுள்ளன. டிஜிட்டல் தொழில்நுட்பம் குறித்து பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்காக இப்பரப்புரை பொதுமக்கள் பங்கேற்கும் விதத்தில் தொடங்கப்படும். இப்பரப்புரை, திருவனந்தபுரம் மாநகராட்சியில் முன்னோட்ட அடிப்படையில் தொடங்கப்பட்டுள்ளது.

**2.அண்மையில் எந்நகரத்தில், புதுப்பிக்கப்பட்ட, 'விலங்குமூலம் பொருட்களைக் கொண்டுசெல்வது குறித்த நினைவுச்சின்னம்' இந்திய இராணுவத்தால் திறந்து வைக்கப்பட்டது?**

அ. புது தில்லி

ஆ. மும்பை

இ. நாக்பூர்

**ஈ. பெங்களூரு ☑**



❖ இந்திய இராணுவத்தின் விநியோகம் மற்றும் போக்குவரத்துப் படையின் தலைமை இயக்குநரால் அண்மையில், பெங்களூருவில், புதுப்பிக்கப்பட்ட, 'விலங்குமூலம் பொருட்களைக் கொண்டுசெல்வது குறித்த நினைவுச்சின்னம்' திறந்து வைக்கப்பட்டது. இந்த நினைவுச்சின்னம், இந்திய இராணுவத்தின் கழுதைகள் மற்றும் குதிரைகளின் பங்களிப்பு மற்றும் சேவையை (குறிப்பாக இமயமலையில் நடந்த போரின்போது) குறிக்கிறது.

❖ இந்த நினைவுச்சின்னம், இந்திய இராணுவத்தில் விலங்குகள் வகித்த பங்கை எடுத்துக்காட்டுகிறது. மேலும், ஒவ்வோர் ஆண்டும் செப்.26 அன்று விலங்குமூலம் பொருட்களைக் கொண்டுசெல்வது குறித்த நினைவுநாளாக (Animal Transport Remembrance Day) அனுசரிக்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

**3.அண்மையில் வெளியிடப்பட்ட, 'Adventures of a Daredevil Democrat' என்ற நூல், எந்த முன்னாள் முதலமைச்சரின் கதையை விவரிக்கிறது?**

அ. செல்வி.ஜெ.ஜெயலலிதா

ஆ. மு.கருணாநிதி

**இ. பிஜு பட்நாயக் ☑**

ஈ. C அச்சுத மேனன்



❖ ஒடிசா மாநிலத்தின் முன்னாள் முதலமைச்சர் பிஜு பட்நாயக்கின் வாழ்க்கை மற்றும் பணிகள் குறித்த சித்திர நூல் ஒன்றை அம்மாநிலத்தின் தற்போதைய முதலமைச்சரும், பிஜு பட்நாயக்கின் மகனுமான நவீன் பட்நாயக்கால் அண்மையில் வெளியிடப்பட்டது. இந்நூல் வெளியீட்டு நிகழ்வில், பல கட்சிகளின் மூத்த அரசியல் தலைவர்கள் கலந்துகொண்டனர். பிஜு பட்நாயக்கின் 104ஆவது பிறந்தநாளை ஒடிசா மாநில அரசு கொண்டாடியது. ஒடிசா மாநில அரசாங்கம், பிஜு பட்நாயக்கின் பிறந்தநாளான மார்ச்.5ஆம் தேதியை, 'பஞ்சாயத்து ராஜ் வெற்றிநாள்' எனக் கொண்டாடுகிறது.

**4.தீவிர மோசடிப்புலனாய்வு அலுவலகத்திற்கான விசாரணைக் கையேட்டை தயாரிப்பதற்காக, சமீபத்தில் அமைக்கப்பட்ட உயர்மட்டக்குழுவின் தலைவர் யார்?**

அ. N K சிங்

ஆ. U K சின்ஹா

**இ. இஞ்செட்டி சீனிவாஸ் ☑**

ஈ. தபன் ரே



❖ தீவிர மோசடிப்புலனாய்வு அலுவலகத்திற்கான விசாரணைக் கையேட்டை தயாரிப்பதற்காக, சமீபத்தில் 12 உறுப்பினர்கள்கொண்ட ஓர் உயர்மட்டக்குழுவை அரசாங்கம் அமைத்தது. பெருநிறுவன விவகார அமைச்சகம் அண்மையில் வெளியிட்ட உத்தரவின்படி, பெருநிறுவன விவகாரச் செயலாளர் இஞ்செட்டி சீனிவாஸ் இக்குழுவின் தலைவராக இருப்பார். செல்வாக்காளர் குற்றங்களுக்கு எதிராக பயனுள்ள விசாரணைகள் மற்றும் ஆய்வுகள் செய்வதற்கான விரிவான கையேட்டை இந்தக் குழு உருவாக்கும்.

**5.சமீபத்தில், 'நாரி சக்தி புரஸ்கர்' விருதைப்பெற்ற அவனி சதுர்வேதி, பாவனா காந்த் மற்றும் மோகனா சிங் ஜிதர்வால் ஆகியோர் எந்தத் தொழிற்துறையுன் தொடர்புடையவர்கள்?**

அ. விளையாட்டு வீராங்கனைகள்

**ஆ. போர் விமானிகள் ☑**

இ. இராணுவ அதிகாரிகள்

ஈ. கடற்படை மீகாமன்கள்



❖ சர்வதேச பெண்கள் நாளை முன்னிட்டு, குடியரசுத்தலைவர் இராம்நாத் கோவிந்த், அண்மையில், இந்திய விமானப்படையின் முதல் பெண் போர் விமானிகளான அவனி சதுர்வேதி, பவானா காந்த் மற்றும் மோகனா ஜிதர்வால் உள்ளிட்ட மொத்தம் 15 பேருக்கு, "பெண்கள் சக்தி விருது" வழங்கினார்.

- ❖ விமானப்படையின் போர்ப்பிரிவில் சோதனை அடிப்படையில் பெண்களை சேர்த்துக்கொள்ள மத்திய அரசு முடிவெடுத்த பிறகு, இவர்கள் மூவரும் இந்திய விமானப்படையின் போர் விமானப்படைப்பிரிவில் சேர்த்துக்கொள்ளப்பட்டனர். இவர்கள், கடந்த 2018ஆம் ஆண்டில் MIG–21 இரக விமானத்தை தனியாக இயக்கியதன்மூலம் இந்தியாவின் முதலாவது பெண் போர் விமானிகள் என்ற சிறப்பைப்பெற்றனர்.

**6.குறு, சிறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் அமைச்சகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட, 'பெண் தொழில்முனை–வோர்களை மேம்படுத்துவது குறித்த மாநாடு' நடைபெற்ற இடம் எது?**

அ. கொச்சின்

ஆ. சென்னை

இ. ஹைதராபாத்

**ஈ. புது தில்லி ☑**

- ❖ FICCI–flo, CII மற்றும் இந்தியா SME மன்றம் போன்ற பல்வேறு தொழிற்துறை அமைப்புகளுடன் இணைந்து குறு, சிறு & நடுத்தர நிறுவனங்கள் (MSME) அமைச்சகம், 'பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவது குறித்த மூன்று நாள் மாநாட்டை நடத்தியது. மத்திய MSME அமைச்சர் நிதின் கட்கரி, இந்தமாநாட்டையும், 'பெண் தொழில்முனைவோரை மேம்படுத்துவதற்கான உகந்த வணிகச்சூழல் அமைப்பை உருவாக்குதல்' குறித்த குழு விவாதத்தையும் தொடங்கிவைத்தார். இதில், நாட்டின் அனைத்துப் பகுதிகளிலிருந்தும் 300'க்கும் மேற்பட்ட பெண் தொழில்முனைவோர்கள் பங்கேற்றனர்.

**7.பெண் அறிவியலாளர் திட்டம் C (KIRAN IPR) மற்றும் அறிவியல் ஜோதி ஆகிய இரண்டும், எந்த மத்திய அமைச்சகத்தின் திட்டங்களாகும்?**



அ. பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சகம்

**ஆ. அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகம் ☑**

இ. மனிதவள மேம்பாட்டு அமைச்சகம்

ஈ. திறன் மேம்பாடு மற்றும் தொழில்முனைவு அமைச்சகம்

- ❖ மத்திய அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சர் ஹர்ஷ் வர்தன், 011–26565285 என்றவொரு புதிய உதவி எண்ணை அறிமுகப்படுத்தியுள்ளார். அது, மாணவிகள், பெண் ஆராய்ச்சியாளர்கள், பெண் தொழில்முனைவோர்கள் மற்றும் அறிவியலாளர்களுக்கு அவர்களின் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் திட்டங்கள் தொடர்பான கேள்விகளுக்கு விடைபெற உதவுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

- ❖ பெண் அறிவியலாளர் திட்டம் சி (KIRAN IPR) மற்றும் புதிதாக தொடங்கப்பட்ட அறிவியல் ஜோதி திட்டம் ஆகிய இரண்டும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் திட்டங்களாகும். அறிவியல் ஜோதி திட்டத்தின்கீழ், தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்டிர்க்கு IIT'கள், NIT'கள் & பிற முன்னணி நிறுவனங்களில் நடக்கும் அறிவியல் முகாம்களில் கலந்துகொள்ள உதவிகள் வழங்கப்படும்.

**8.அண்மையில் காலமான ஹன்ஸ் ராஜ் பரத்வாஜ், எந்த இலாக்காவின் முன்னாள் மத்திய அமைச்சராக இருந்தார்?**



அ. பாதுகாப்பு

**ஆ. சட்டம் மற்றும் நீதி ☑**

இ. நிதி

ஈ. வெளியுறவு

❖ இந்திய தேசிய காங்கிரஸைச் சார்ந்த இந்திய அரசியல்வாதியான ஹன்ஸ் ராஜ் பரத்வாஜ், சமீபத்தில் காலமானார். அவர், 5 ஆண்டுகாலத்திற்கு மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சராகவும், ஒன்பது ஆண்டுகாலத்திற்கு இணையமைச்சராகவும் இருந்தார். அவர், இந்தியாவில் கிராமப்புற நீதிமன்றங்கள் (கிராம நியாயாலயங்கள்) என்ற கருத்தை அறிமுகப்படுத்தினார். கர்நாடகம் & கேரள மாநிலத்தின் ஆளுநராகவும் அவர் பணியாற்றியுள்ளார்.

**9. 150 ரஞ்சிக்கோப்பைப் போட்டிகளில் விளையாடிய முதல் இந்திய கிரிக்கெட் வீரர் யார்?**



அ. தினேஷ் கார்த்திக்

ஆ. பார்த்திவ் படேல்

**இ. வாசிம் ஜாபர் ☑**

ஈ. இர்பான் பதான்

❖ 150 ரஞ்சிக்கோப்பைப் போட்டிகளில் விளையாடிய முதல் இந்திய கிரிக்கெட் வீரர் – முன்னாள் இந்திய தொடக்க ஆட்டக்காரர் வாசிம் ஜாபர் ஆவார். ரஞ்சிக்கோப்பை வரலாற்றில் அதிக இரன்கள் எடுத்த வீரர் ஆவார். அனைத்து வகையான விளையாட்டுகளிலிருந்தும் ஓய்வுபெறுவதாக அறிவித்த காரணத்தால், ஜாபர் சமீபத்திய செய்திகளில் இடம்பெற்றார். அவர், 50.67 சராசரியுடன் 19,410 இரன்கள் எடுத்துள்ளார். ஜாபர் தனது முதல் தர கிரிக்கெட் வாழ்க்கையில், 57 சதங்களையும் 91 அரைசதங்களையும் அடித்தார்.

**10. Business Line Changemaker விருதுகளில், 'ஆண்டின் சேஞ்ச்மேக்கர்' என அறிவிக்கப்பட்ட இந்திய விளையாட்டு ஆளுமை யார்?**




அ. P V சிந்து

ஆ. மேரி கோம்

**இ. டூட்டி சந்த் ☑**

ஈ. ஹிமா தாஸ்

❖ புது தில்லியில் நடைபெற்ற நடப்பாண்டு (2020) 'Business Line Changemaker' விருதுகள் வழங்கும் விழாவின்போது, சமுதாயத்தில் பெருமாற்றத்தைக்கொண்டுவந்ததற்காக, இந்திய தடகள வீராங்கனை டூட்டீ சந்த், ISRO (இந்திய விண்வெளி ஆய்வு மையம்) உடன் இணைந்து நடப்பாண்டுக்கான (2020) 'Changemaker' விருதைப் பெற்றுக்கொண்டார்.

- 100 மீ., ஓட்டப்பந்தயத்தை வெறும் 11.22 வினாடிகளில் முடித்து தேசிய சாதனை படைத்தவராவார் டூட்டீ சந்த். தற்போது, டோக்கியோ 2020 ஒலிம்பிக் போட்டிக்கு தகுதிபெறுவதற்கான பயிற்சியை டூட்டீ சந்த் மேற்கொண்டுவருகிறார்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

- தமிழ்நாட்டில் ஏப்.1 முதல் செப்.30 வரை மக்கள்தொகை கணக்கெடுப்பு நடத்தப்படும் என தமிழ்நாடு அரசு அறிவித்துள்ளது. இக்கணக்கெடுப்பின்போது 31 கேள்விகள் கேட்கப்பட்டு அதற்கான பதில்களை பதிவுசெய்யவேண்டும். அதில், முதல் 5 கேள்விகள் வீடு தொடர்புடையதாக இருக்கும். 6 மற்றும் $7_{ஆவது}$ கேள்விகள், அந்த வீடு, வசிப்பதற்கு பகுதியாக அல்லது முழுமையாக பயன்படுத்தப்படுகிறதா? என்பது பற்றியும், $8–10_{ஆவது}$ கேள்விகள் வீட்டின் தலைவரை பற்றியும், $11–31_{ஆவது}$ கேள்விகள் வீட்டிலிருக்கும் வசதிகள், பொருட்கள், சாதனங்கள் பற்றியதாகவும் இருக்கும்.

- தமிழ்நாட்டில் உள்ள கடைகள், நிறுவனங்களின் பெயர்ப்பலகைகளில் தமிழ் முதன்மையாக இருக்க வேண்டும் எனத் தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது.
    - தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் உணவகங்களின் பெயர்ப்பலகை தமிழில் இருக்கவேண்டும் என அரசாணைகள் எண் – 3312, நாள் 29.12.1983 மற்றும் அரசாணை எண் 499, நாள் $29.12.1984_{ஆம்}$ ஆண்டிலிருந்து முறையே $1948_{ஆம்}$ ஆண்டு தமிழ்நாடு கடைகள் மற்றும் நிறுவனங்கள் விதிகளிலும், $1959_{ஆம்}$ ஆண்டு தமிழ்நாடு உணவகங்கள் விதிகளிலும் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டு நடைமுறைபடுத்–தப்பட்டு வருகிறது.
    - மேற்படி அரசாணைகளின்படி கடைகள், வணிக நிறுவனங்கள் மற்றும் உணவகங்களின் பெயர்ப்பலகையில் தமிழ் எழுத்துக்கள் முதன்மையாக இருக்கவேண்டும். பிற மொழிகள் பெயர்ப்பலகையில் பயன்படுத்தப்பட்டால், ஆங்கில மொழி இரண்டாவது இடத்திலும் பிற மொழிகள் மூன்றாவது இடத்திலும் இருக்கவேண்டும்.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.பஞ்சாப் மாநில அரசு அறிமுகப்படுத்திய, "Cova Punjab" என்ற அலைபேசி செயலி, எந்த நோய்குறித்த விழிப்புணர்வைப் பரப்புவதை நோக்கமாகக் கொண்டுள்ளது?**

அ. கால் மற்றும் வாய் நோய்

**ஆ. கொரோனா வைரஸ் ☑**

இ. பன்றிக் காய்ச்சல்

ஈ. மலேரியா



❖ கொரோனா வைரசுக்கு எதிராக எடுக்க வேண்டிய முன்னெச்சரிக்கைகள் குறித்து விழிப்புணர்வைப் பரப்புவதற்காக பஞ்சாப் மாநில அரசாங்கம், அண்மையில், "Cova Punjab" என்ற அலைபேசி செயலியை அறிமுகப்படுத்தியது. இந்தச்செயலியை, மத்திய சுகாதார மற்றும் குடும்பநலத்துறையுடன் இணைந்து அம்மாநிலத்தின் அரசு சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர் துறை உருவாக்கியுள்ளது.

❖ இந்தச்செயலியில், அரசால் வழங்கப்பட்ட நோய்த்தொற்று அறிகுறிகளை சரிபார்த்துக்கொள்வதற்கான வசதியும் கொடுக்கப்பட்டுள்ளது. மேலும், அருகிலுள்ள மருத்துவமனையையும் இது பரிந்துரைக்கிறது.

**2. Lt.Gen KJS தில்லான், அண்மையில் எந்த அமைப்பின் தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டார்?**

அ. புலனாய்வுப் பணியகம்

**ஆ. பாதுகாப்புப் புலனாய்வு அமைப்பு ☑**

இ. மத்திய புலனாய்வுப் பிரிவு

ஈ. ஆராய்ச்சி மற்றும் பகுப்பாய்வு பிரிவு



❖ Lt.Gen KJS தில்லான், முப்படைக்கும் தகவல் சேகரிக்கும் பாதுகாப்புப்புலனாய்வு அமைப்பின் தலைமை இயக்குநராகவும், ஒருங்கிணைந்த பாதுகாப்பு அதிகாரிகளின் (புலனாய்வு) துணைத்தலைவராகவும் நியமிக்கப்பட்டுள்ளார். அவர், இராணுவத்தின் 15ஆவது பிரிவின் முன்னாள் தலைவராக இருந்தார். இந்நியமனத்தின்மூலம், Lt. General AS பேடியை அடுத்து KJS தில்லான் இப்பதவிக்கு வந்துள்ளார். முப்படைகளிலிருந்தும் உளவுத்துறை தகவல்களை கையாளுவதே இப்பதவிக்கான பொறுப்பாகும்.

**3. 'ஷாதி பாக்யா திட்டம்' என்பது எந்த மாநிலத்தின் திட்டமாக இருந்தது?**

அ. பீகார்

ஆ. ஒடிசா

**இ. கர்நாடகம் ☑**

ஈ. மகாராஷ்டிரா



❖ கர்நாடக மாநில அரசு, அண்மையில், கடந்த 2013ஆம் ஆண்டில் அம்மாநிலத்தில் தொடங்கப்பட்ட, 'ஷாதி பாக்யா திட்டத்தை' நிறுத்தியது. இந்தத்திட்டத்தின்கீழ், இசுலாமிய மணப்பெண்களுக்கு, ஆதார் மற்றும் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குடும்பத்தினருக்கான அட்டைகளைச் சமர்ப்பிக்கும்போது திருமணச்

செலவுகளுக்காக ₹50,000 நிதியுதவி வழங்கப்பட்டுவந்தது. இந்தத்திட்டத்திற்காக, முந்தைய கூட்டணி அரசு, ₹60 கோடி நிதி ஒதுக்கியிருந்தது குறிப்பிடத்தக்கது.

**4.இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் இ–வித்யபாரதி & இ–ஆரோக்கிய பாரதி (e–VBAB) நெட்வொர்க் திட்டத்தில், அண்மையில் பதினாறாவது உறுப்பினராக இணைந்த நாடு எது?**

அ. செனகல்

**ஆ. தி காம்பியா ☑**

இ. கானா

ஈ. சாம்பியா




❖ தொலைத்தொடர்பு ஆலோசகர்கள் இந்தியா லிமிடெட் (TCIL) ஆனது, அண்மையில், இந்திய வெளியுறவு அமைச்சகத்தின் இ–வித்யபாரதி மற்றும் இ–ஆரோக்கியபாரதி (e–VBAB) வலையமைப்புத் திட்டத்தில் காம்பியாவை பங்கேற்கச் செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது.

❖ இத்திட்டத்தில் பங்கேற்கும் பதினாறாம் நாடு காம்பியா ஆகும். TCIL என்பது e–VBAB வலையமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்தும் நிறுவனமாகும். இது, ஆப்பிரிக்க நாடுகளுக்கு தொலைமருத்துவம் மற்றும் தொலைதூர கல்விச்சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.

**5.தாராமதி & பிரேமாமதியின் கல்லறைகள், எந்த இந்திய மாநிலம் / யூனியன் பிரதேசத்தில் உள்ளன?**

அ. புது தில்லி

ஆ. உத்தரபிரதேசம்

**இ. தெலுங்கானா ☑**

ஈ. மகாராஷ்டிரா



❖ குதுப் ஷாகி கல்லறை வளாகத்திற்குள் உள்ள தாராமதி & பிரேமாமதி ஆகியோரின் கல்லறைகளுக்கு அமெரிக்கா வழங்கிய நிதியுதவித்திட்டம் நிறைவடைந்ததாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் கென்னத் ஜஸ்டர் அறிவித்தார்.

❖ இவ்விரு கல்லறைகளும், தெலுங்கானாவின் தலைநகரமான ஹைதராபாத்தில் அமைந்துள்ள 17ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கல்லறைகளாகும். கடந்த 2019 பிப்ரவரியில், அகா கான் அறக்கட்டளையுடன் கூட்டிணைந்து கலாசார பாதுகாப்பிற்கான தூதர்கள் நிதியத்தின்மூலம் அமெரிக்க தூதர் கென்னத் ஜஸ்டர், $103,000 மானியத்தை அறிவித்தார். கடந்த 2014ஆம் ஆண்டில், கல்லறை கட்டமைப்புகளை வரைபடமாக்குவதற்கும் ஆவணப்படுத்துவதற்கும் இதேபோன்ற மானியத்தை அவை பெற்றன.

**6.நடப்பாண்டு (2020) சர்வதேச பெண்கள் நாளுக்கான கருப்பொருள் என்ன?**

அ. Think Equal, Build Smart, Innovate for Change




**ஆ. I am Generation Equality: Realizing Women's Rights ☑**

இ. Time is now: Rural and Urban Activists Transforming Women's Lives

ஈ. Role of Women in Addressing Climate Change

❖ ஆண்டுதோறும் மார்ச் 8 அன்று சர்வதேச பெண்கள் நாள் உலகம் முழுவதும் அனுசரிக்கப்படுகிறது. "I am Generation Equality: Realizing Women's Rights" என்பது நடப்பாண்டில் வரும் இந்நாளுக்கான, கருப்பொருளாகும். இக்கருப்பொருள், ஐக்கிய நாடுகளின் பெண்கள் அமைப்பின், "Generation Equality" என்ற பரப்புரைக் கருப்பொருளுக்கு இணங்க உள்ளது.

❖ இந்நாள், பெய்ஜிங்கில், பெண்கள் பற்றிய நான்காவது உலக மாநாட்டில் ஏற்றுக்கொள்ளப்பட்ட பெய்ஜிங் பிரகடனம் மற்றும் செயல்பாட்டுக்கான தளத்தின் 25ஆவது ஆண்டு நிறைவைக்குறிக்கிறது. "Each For Equal" என்பது இந்நாளில் மேற்கொள்ளப்படும் பரப்புரைக்கான கருப்பொருளாகும்.

**7.அங்கிதா ரெய்னா தொடர்புடைய விளையாட்டு எது?**



அ. பூப்பந்து

**ஆ. டென்னிஸ் ☑**

இ. ஸ்குவாஷ்

ஈ. டேபிள் டென்னிஸ்

❖ அங்கிதா ரெய்னாவின் அபார இரட்டை வெற்றியால் முதன்முறையாக பெடரேஷன் கோப்பை டென்னிஸ் போட்டியில் உலக சுற்றுக்கு இந்தியா தகுதிபெற்று வரலாறு படைத்துள்ளது. துபாயில் நடைபெற்ற ஆட்டத்தில் சீனா, இந்தியா, தென்கொரியா, இந்தோனேசியா, தைவான், உஸ்பெகிஸ்தான் உள்ளிட்ட மகளிர் அணிகள் கலந்துகொண்டன. இதில் சீனாவிடம் மட்டும் இந்தியா தோல்விகண்டது. உஸ்பெகிஸ்தான், தென்கொரியா, சீனதைபே உள்ளிட்ட அணிகளை வீழ்த்தியது. இரட்டையர் பிரிவில், சானியா மிர்சா இந்தியாவை பிரதிநிதித்துவப்படுத்தினார்.

**8. ICC பெண்கள் T20 உலகக்கோப்பை அணியில் இடம்பெற்ற ஒரே இந்திய வீராங்கனை யார்?**



அ. ஹர்மன்பிரீத் கௌர்

ஆ. ஷபாலி வர்மா

**இ. பூனம் யாதவ் ☑**

ஈ. ஸ்மிருதி மந்தனா

❖ T20 உலகக்கோப்பை தொடருக்கான ICC–XI அணியில் இந்திய வீராங்கனை பூனம் யாதவ் மட்டும் இடம்பிடித்துள்ளார். 12ஆவது வீராங்கனையாக இந்தியாவின் ஷபாலி வர்மா தேர்வுசெய்யப்பட்டுள்ளார். பூனம் யாதவ், மொத்தம் 10 விக்கெட் எடுத்திருந்தார். ஆஸ்திரேலியாவுக்கு எதிரான லீக் போட்டியில் 4 விக்கெட் வீழ்த்தி, தொடரை வெற்றியுடன் தொடங்க உதவினார். மற்றொரு இந்திய வீராங்கனையான ஷபாலி வர்மா, மொத்தம் 163 ரன்கள் குவித்து, ICC T20 தரவரிசையில் முதலிடத்தை எட்டினார்.

**9. "மிஷன் சக்தி" என்றழைக்கப்படும் சுயவுதவிக்குழுவுக்கு, பிரத்யேகத் துறையொன்றை அமைப்பதற்கு முடிவுசெய்துள்ள மாநிலம் எது?**

அ. மேற்கு வங்கம்

ஆ. கேரளா

**இ. ஒடிசா ☑**

ஈ. ஆந்திர பிரதேசம்

❖ ஒடிசா மாநில முதலமைச்சர் நவீன் பட்நாயக், அண்மையில், "மிஷன் சக்தி" என்றழைக்கப்படும் சுய உதவிக்குழுவுக்கு பிரத்யேகத் துறையொன்றை அமைக்கும் முதல் மாநிலமாக ஒடிசா இருக்கும் என்று அறிவித்தார். இந்தப்பிரத்யேகத் துறையுடன் கூடுதலாக, மாநிலத்தின் அனைத்து தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் ஊட்டச்சத்து மேம்பாட்டை மையமாகக்கொண்ட ஓர் ஊட்டச்சத்துத்திட்டத்தையும் அந்த மாநில அரசு அண்மையில் அறிமுகப்படுத்தியது.

**10.தேர்தல் முறைகேடுகளைத் தடுப்பதற்கான, 'NIGHA' என்னும் அலைபேசி செயலி (app) என்பது எந்த மாநிலத்தின் முன்னெடுப்பாகும்?**

அ. பஞ்சாப்

ஆ. இராஜஸ்தான்

இ. குஜராத்

**ஈ. ஆந்திர பிரதேசம் ☑**

❖ ஆந்திர பிரதேச மாநில அரசு, அண்மையில், 'NIGHA' என்னும் ஓர் செயலியை அறிமுகப்படுத்தியது. இது, தேர்தலின்போது ஏற்படும் முறைகேடுகளைத் தடுப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. இச்செயலியின் மூலம், எந்தவொரு நபரும், பரப்புரையின்போதான ஊழல் அல்லது முறைகேடுகள் குறித்து புகார்களை பதிவுசெய்யலாம். பொதுமக்களால் அனுப்பப்படும் நிழற்படங்கள், ஒலிக்கோப்பு அல்லது காணொளிப் பதிவுகளுடன், அதற்குரிய நடவடிக்கைகள் அரசாங்கத்தால் எடுக்கப்படும்.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ சென்னையில் மாநகர பேருந்துகள் வருவதை பயணிகள் அறிந்துகொள்ளும் வகையில், 'சலோ' என்ற புதிய செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இதன்மூலம் பயணிகள், பேருந்துகளின் வருகை, வழித்தட நிறுத்தங்கள், எவ்வளவு நேரத்துக்குள் வரும் போன்ற விவரங்களை தெரிந்துகொள்ளமுடியும்.

❖ உலகளாவிய சிறந்த உயர்கல்வி நிறுவனங்களின் QS தரவரிசைப்பட்டியலில் சென்னை அண்ணா பல்கலைக்கழகம் கடந்த ஆண்டைவிட 24 இடங்கள் முன்னேறி 373ஆவது இடத்தைப்பிடித்துள்ளது. இதேபோல், மெட்ராஸ் IIT'உம் 7 இடங்கள் முன்னேறி, 88ஆவது இடத்தைப்பிடித்துள்ளது.

---

## நடப்பு நிகழ்வுகள்

**1.அனைத்து சேமிப்பு வங்கி கணக்குகளுக்குமான குறைந்தபட்ச இருப்புத்தொகை தேவையை தள்ளுபடி செய்த இந்திய பொதுத்துறை வங்கி எது?**

அ. பஞ்சாப் தேசிய வங்கி

**ஆ. பாரத ஸ்டேட் வங்கி ☑**

இ. யூனியன் பேங்க் ஆப் இந்தியா

ஈ. கனரா வங்கி

❖ பாரத ஸ்டேட் வங்கியில் (SBI) 44.51 கோடி சேமிப்புக்கணக்குகள் உள்ளன. மெட்ரோ நகரங்களில் ₹3 ஆயிரமும், இதர நகரங்களில் ₹2 ஆயிரமும், ஊரக பகுதிகளில் ஆயிரம் ரூபாயும் இந்தக்கணக்குகளில் குறைந்தபட்ச இருப்பு வைத்திருக்க வேண்டியிருந்தது. அப்படி வைத்திருக்காவிட்டால், ₹5 முதல் ₹15 வரை (வரிகள் தனி) அபராதம் விதிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், எல்லா சேமிப்புக்கணக்குகளிலும் குறைந்தபட்ச இருப்பை வைத்திருக்க தேவையில்லை என பாரத ஸ்டேட் வங்கி அறிவித்துள்ளது.

❖ குறுந்தகவல் (SMS) அனுப்புவதற்கான கட்டணமும் இரத்துசெய்யப்பட்டுள்ளது. அதேவேளை, சேமிப்புக் கணக்குக்கான வட்டி விகிதத்தை ஒரே மாதிரியாக 3 சதவீதமாக குறைத்துள்ளது. அதுபோல், பல்வேறு கால அளவிலான வைப்புநிதி திட்டங்களுக்கான வட்டி விகிதங்களையும் 0.15% வரை குறைத்துள்ளது.

**2.உலக பொருளாதார மன்றம் (World Economic Forum) தனது புதிய 115 இளம் சர்வதேசத் தலைவர்களின் பட்டியலை வெளியிட்டது. இப்பட்டியலில் இடம்பெற்றுள்ள இந்தியர்களின் எண்ணிக்கை?**

அ. இரண்டு

**ஆ. ஐந்து ☑**

இ. பத்து

ஈ. பதினான்கு

❖ உலக பொருளாதார மன்றம் (WEF) தனது புதிய 115 இளம் சர்வதேசத்தலைவர்களின் பட்டியலை வெளியிட்டுள்ளது. இந்தப்பட்டியலின்படி, 52 நாடுகளைச்சேர்ந்த நாற்பது வயதிற்குட்பட்ட இந்த இளம் உலகளாவிய தலைவர்கள், உலகத்தையே மாற்றும் நோக்கில் அந்தந்தத் துறைகளில் பணியாற்றி வருகிறார்கள்; மேலும் அவர்கள், "மாற்றத்தை உருவாக்குபவர்கள்" என்று அழைக்கப்படுகிறார்கள்.

❖ பைஜூ வகுப்புகளின் நிறுவனர் பைஜூ இரவீந்திரன், சொமடோவின் இணை நிறுவனர் கௌரவ் குப்தா, தாரா சிங் வச்சனி (அந்தாரா சீனியர் லிவிங்கின் தலைமைச் செயல் அதிகாரி), வினதி முத்ரேஜா (வினதி ஆர்கானிக்ஸ் லிட்'இன மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அதிகாரி) மற்றும் ஸ்வபன் மேரா (தலைமைச் செயல் அதிகாரி, IORA சுற்றுச்சூழல் தீர்வுகள்) ஆகிய ஐந்து இந்தியர்களின் பெயர்கள் இந்தப் பெருமைமிகு பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

**3.ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) புதிய தரவுகளின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில், அதிக அளவில் ஆயுதங்களை ஏற்றுமதி செய்த நாடு எது?**

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஆ. இரஷ்யா

இ. பிரான்ஸ்

ஈ. சீனா



- ஸ்டாக்ஹோம் பன்னாட்டு அமைதி ஆராய்ச்சி நிறுவனத்தின் (SIPRI) புதிய தரவுகளின்படி, கடந்த ஐந்து ஆண்டுகளில் (2015–2019) அதிக அளவில் ஆயுதங்களை ஏற்றுமதி செய்த நாடாக ஐக்கிய அமெரிக்க நாடுகள் உள்ளது. அதன் ஏற்றுமதி 23% அதிகரித்து, அனைத்துலக ஆயுத ஏற்றுமதியில் 36 சதவீதமாக உள்ளது. ஐக்கிய அமெரிக்க நாடுகளின் ஆயுத ஏற்றுமதியில் சரிபாதி மத்திய கிழக்கு நாடுகளுக்குச் சென்றதாகக் கூறப்படுகிறது.
- அதைத்தொடர்ந்த இடங்களில் இரஷ்யா, பிரான்ஸ், ஜெர்மனி மற்றும் சீனா ஆகிய நாடுகள் உள்ளன. இந்தியாவுக்கான விற்பனையில் வீழ்ச்சி ஏற்பட்ட காரணத்தால் ரஷ்யாவிலிருந்தான ஆயுத இறக்குமதி 18% அளவுக்கு குறைந்துள்ளது. 2015ஆம் ஆண்டு முதல் 2019ஆம் ஆண்டு வரை, சர்வதேச ஆயுத ஏற்றுமதியானது அதற்கு முந்தைய ஐந்தாண்டுகளை ஒப்பிடுகையில் 5.5% அதிகரித்துள்ளது.

**4. COVID–19'க்கு எதிராக அனைத்து வணிக சமூகத்தையும் திரட்டுவதற்காக, "COVID Action Platform" என்றவொன்றை அறிமுகப்படுத்தியுள்ள பன்னாட்டு அமைப்பு எது?**

அ. உலக வங்கி

ஆ. உலக பொருளாதார மன்றம் ☑

இ. பன்னாட்டுச் செலவாணி அமைப்பு

ஈ. ஐக்கிய நாடுகள் அவை




- COVID–19 நோய்த்தொற்றுக்கு எதிராக, கூட்டிணைந்து ஆதரவளிக்கும் நோக்கில், அனைத்து வணிக சமூகத்தையும் திரட்டுவதற்காக, உலக பொருளாதார மன்றம் சமீபத்தில் உலக நலவாழ்வு அமைப்பின் ஆதரவுடன், 'COVID Action Platform' என்றவொன்றை அறிமுகப்படுத்தியுள்ளது. இது உலகெங்குமுள்ள அரசாங்கங்கள் உட்பட அனைத்து வணிகங்கள் மற்றும் தொழிற்குழுமங்களுக்காக திறந்திருக்கும். இது, 'COVID–19' வைரஸ் தொற்றைக் கையாளுவதற்கான அனைத்துலக நிறுவனங்களின் பல்வேறு முயற்சிகளையும் ஒருங்கிணைக்கும்.

**5.எந்தத் துணை இராணுவப்படையின் தலைமை இயக்குநராக SS தேஸ்வால் நியமிக்கப்பட்டுள்ளார்?**

அ. மத்திய சேமக்காவல் படை

ஆ. மத்திய தொழிலகங்கள் பாதுகாப்புப்படை

இ. தேசிய பாதுகாப்புப் படை

ஈ. எல்லை பாதுகாப்புப் படை ☑



- இந்தோ–திபெத் எல்லை காவல்படையின் தலைமை இயக்குநரான SS தேஸ்வால், எல்லை பாதுகாப்பு படையின் தலைவராக, தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

- எல்லை பாதுகாப்புப்படையின் தலைவர் பொறுப்பிலிருந்த விவேக் ஜோரி, மத்திய பிரதேச மாநிலத்தின் காவல்துறை தலைமை இயக்குநராக நியமிக்கப்பட்டுள்ளார். உள்துறை அமைச்சக அறிவிப்பின்படி, அடுத்து ஒருவர் நியமிக்கப்படும் வரையிலும் (அ) அடுத்த உத்தரவு வரும்வரையிலும் SS தேஸ்வால் அவரின் இந்தப்பொறுப்பை கூடுதலாக வகித்து வருவார்.

**6.ஆறாவது சர்வதேச யோகா நாளின் முதன்மை தேசிய நிகழ்வுகள் நடைபெறவுள்ள இடம் எது?**



அ. ராஞ்சி

**ஆ. லே ☑**

இ. புது தில்லி

ஈ. கௌகாத்தி

- நடப்பாண்டில் (2020) வரும் ஆறாவது சர்வதேச யோகா நாளின் முதன்மை தேசிய நிகழ்வுகள், வரும் ஜூன்.21 அன்று லடாக்கிலுள்ள லேவில் நடைபெறும். இந்த தேசிய நிகழ்வுக்கு, பிரதமர் நரேந்திர மோடி தலைமை தாங்குவார் என எதிர்பார்க்கப்படுகிறது. லே போன்ற உயரமானதோர் இடத்தில் இந்நிகழ்வு நடைபெறுவது இதுவே முதல்முறையாகும். கடந்தாண்டு (2019), ஜார்க்கண்ட் மாநிலத்தின் ராஞ்சியில் யோகா நாள் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் பிரதமர் பங்கேற்றார். முதல் சர்வதேச யோகா நாள், கடந்த 2015 ஜூன்.21 அன்று உலகம் முழுவதும் கடைப்பிடிக்கப்பட்டது.

**7. 2024ஆம் ஆண்டுக்குப்பின்னர், அதிபர் தேர்தலில் அதிபரைப் போட்டியிட அனுமதிக்கும் மசோதாவை எந்த நாட்டின் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ளது?**



அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள்

ஆ. பிரிட்டன்

**இ. இரஷ்யா ☑**

ஈ. சீனா

- இரஷ்ய அதிபர் பதவிக்காலத்திற்கான வரம்பை தளர்த்தும், அரசியல் சாசன சட்டதிருத்தத்திற்கு, 'டூமா' என அழைக்கப்படும் அந்நாட்டு நாடாளுமன்றத்தின், கீழவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம், விளாடிமிர் புதின், 2036 வரை, பதவியில் நீடிக்க வழி ஏற்பட்டுள்ளது. இம்மசோதா நாடாளுமன்றத்தின் அதிகாரங்களை மாற்றி, அதிபர் விளாடிமிர் புதினை 2024ஆம் ஆண்டில் மீண்டும் அவரை அதிபர் தேர்தலில் போட்டியிட அனுமதிக்கிறது. இது அவரது ஆட்சியை மேலும் இருமுறை நீட்டிக்கக்கூடும்.

- இந்தத்தீர்மானத்திற்கு ஆதரவாக, 383 வாக்குகள் விழுந்தன. எதிர்த்து ஒரு வாக்குகூட விழவில்லை. இதையடுத்து அரசியல் சாசன சட்டதிருத்தம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது. இதற்கு, மேல் அவை ஒப்புதலளித்தபின், ஏப்ரல் 22 அன்று பொது வாக்கெடுப்பு நடைபெறும். நீதிபதிகளைப் பதவி நீக்குவது, நாடாளுமன்றத்தில் நிறைவேறப்பட்ட சட்டத்தை ரத்துசெய்வது போன்ற அதிகாரங்களையும் அதிபருக்கு வழங்க இந்த மசோதா வழிவகை செய்யும்.

**8.பங்கஜ் அத்வானி தனது முப்பத்து நான்காவது தேசிய பட்டத்தை வென்ற தேசிய 6–ரெட் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப்பில், இரண்டாமிடத்தைப் பிடித்த இந்திய வீரர் யார்?**

**அ. இஷ்பிரீத் சிங் ☑**

ஆ. ஆதித்யா மேத்தா

இ. யாசின் மெர்ச்சன்ட்

ஈ. லக்கி வாத்னானி



❖ குஜராத் மாநிலம் அகமதாபாத் நகரத்தில் நடந்த தேசிய 6–ரெட் ஸ்னூக்கர் சாம்பியன்ஷிப் தொடரில், இந்திய வீரர் பங்கஜ் அத்வானி கோப்பையை வென்றார். இதன் ஆண்களுக்கான இறுதிப்போட்டியில், மகாராஷ்டிர மாநிலத்தின் இஷ்பிரீத் சிங்கை 7–3 என்ற கணக்கில் வெற்றிபெற்று சாம்பியன் பங்கஜ் அத்வானி பட்டத்தைக் கைப்பற்றினார். இது, இவரது முப்பத்து நான்காவது தேசிய பட்டமாகும்.

**9.உலக நலவாழ்வு அமைப்பானது (WHO), 'COVID–19'ஐ ஒரு தொற்றுநோயாக அறிவித்துள்ளது. இதற்கு முன்னர், WHOஆல், எந்த நோய், தொற்றுநோயாக (pandemic) அறிவிக்கப்பட்டது?**

**அ. H1N1 இன்புளுயன்ஸா ☑**

ஆ. HIV

இ. பன்றிக்காய்ச்சல்

ஈ. ஸ்பானிய காய்ச்சல்



❖ உலக நலவாழ்வு அமைப்பானது (WHO), 'COVID–19'ஐ ஒரு தொற்றுநோயாக (pandemic) அறிவித்தது. இதற்கு முன்னர், கடந்த 2009ஆம் ஆண்டில், 'H1N1 இன்புளுயன்ஸா' பரவலை WHO தொற்றுநோயாக அறிவித்திருந்தது. கொள்ளைநோயொன்று (epidemic disease) பேரளவிலான நிலப்பரப்பில் பரவும்போது (எடுத்துக்காட்டாக பல கண்டங்களில் பரவும்போது) அது, 'தொற்றுநோய்' என்று அறிவிக்கப்படுகிறது. அதுவே, ஒரு நோயானது ஒரு குறிப்பிட்ட நிலப்பரப்பில் மட்டும் மிகவேகமாகப் பரவினால் அது, 'ஒரு குறிப்பிட்ட இடத்திற்குரிய கொள்ளைநோய் (endemic)' என வரையறுக்கப்படுகிறது.

**10.கிராம பஞ்சாயத்துகளில் வேளாண் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக, எந்த இந்திய மாநிலத்துட–னான $80 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் உலக வங்கி கையெழுத்திட்டுள்ளது?**

அ. கர்நாடகம்

ஆ. ஒடிசா

**இ. ஹிமாச்சலபிரதேசம் ☑**

ஈ. மத்தியபிரதேசம்

सत्यमेव जयते
हिमाचल प्रदेश सरकार

❖ ஹிமாச்சலபிரதேச மாநிலத்திலுள்ள சில கிராம பஞ்சாயத்துகளில், நீர் மேலாண்மை நடைமுறைகளை மேம்படுத்துவதற்கும், வேளாண் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்கும் இந்திய அரசு, ஹிமாச்சலபிரதேச மாநில அரசு மற்றும் உலக வங்கி ஆகியவை சமீபத்தில் $80 மில்லியன் டாலர் கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டன.

❖ ஹிமாச்சலபிரதேச மாநிலத்தில், "வள நிலைத்தன்மை மற்றும் காலநிலை நெகிழ்திறனுடன்கூடிய மானாவாரி வேளாண்மைக்கான ஓர் ஒருங்கிணைந்த திட்டம்" 428 கிராம பஞ்சாயத்துகளில் செயல்ப –டுத்தப்படும். இந்தத்திட்டம், 4 இலட்சத்துக்கும் மேற்பட்ட சிறு விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

---

## தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தீவிர காடுவளர்ப்பு நடவடிக்கைகளின் காரணமாக வனப்பரப்பு 2017ஆம் ஆண்டில் 26,281 ச.கி.மீட்டரில் இருந்து 2019ஆம் ஆண்டில் 26,364 ச.கி.மீ ஆக அதிகரித்துள்ளது. மரங்கள் பரப்பளவு 2017ஆம் ஆண்டில் 4,671 ச.கி.மீட்டரிலிருந்து 2019ஆம் ஆண்டில் 4,830 ச.கி.மீ ஆக அதிகரித்துள்ளது. "காடுகளின் வளங் காட்டி" என அழைக்கப்படும் புலிகளின் எண்ணிக்கை 2014ஆம் ஆண்டில் 229இலிருந்து 2018ஆம் ஆண்டில் 264ஆக அதிகரித்துள்ளது.

---